பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 28 புதன்கிழமை 14.10.2020 கதிர் 339

இனி அது ரகசியம் அல்ல!

இருபதாவது திருத்தத்தை எப்படியாகிலும் நிறைவேற்றி விட வேண்டும் என்ற ராஜபக்ஷக்களின் முயற்சி நொண்டுவதாகவே தோன்றுகின்றது.

பௌத்த பீடங்களைத் தொடர்ந்து கத்தோலிக்க ஆயர் பேரவையும் களத்தில் இறங்கி பக்கம்02

## மணி சார்பான 10 உறுப்பினர்களுக்கு இறுதி முடிவு கேட்டு முன்னணி கடிதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.14

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் வி. மணிவண்ணன் சார்பில் செயற்படும் 10 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களிடம் அவர்களின் இறுதித் தெரிவைத் தெரிவிக்குமாறு கோரி முன்னணியின் பொதுச்செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

தாங்கள் எமது அரசியல் இயக்கத்துடன் தொடர்ந்து பயணிப்பது அல்லது பயணிக்காது விலகுவது தொடர்பான தங்களின் இறுதித் தெரிவைத் தீர்மானிப்பதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படுகின்றது. இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்று 14 நாள்களுக்குள் தங்களின் இறுதித் தெரிவு தொடர்பாக எனக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துமாறு பக்கம் 11

## ரிஷாத்தைக் கைதுசெய்ய களமிறங்கியது பொலிஸ்!

### கொழும்பிலும் மன்னாரிலும் சல்லடை

கொழும்பு,ஒக்.14

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைக் கைது செய்வதற்கு அவரின் கொழும்பு மற்றும் மன்னார் பகுதிகளில் அமைந்துள்ள இல்லங்களுக்குப் பொலிஸார் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று மாலை தெரிவித்துள்ளார். பக்கம் 02



## ‘20’ வேண்டாம்!

### கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் வலியுறுத்து

**அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவைக் கைவிடுமாறு கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

**புதிய அரசமைப்பை இயற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுமாறும் மேற்படி பேரவை நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -**

**மக்களின் இறைமை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாக்கப்பட வேண்டும். 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னர் அதனை விரிவாக ஆராய வேண்டும்.** பக்கம் 02

## ஊடகவியலாளரை தாக்கியோர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் மரக்கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டமை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் பக்கம் 11

## பதிவுத் திருமணம் செய்த பெண்ணுக்குத் தொற்று!

### மாப்பிள்ளையும் 13 பேரும் தனிமைப்படுத்தப்பட்டனர்

மினுவாங்கொடையில் பதிவுத் திருமணத்துக்காக சென்ற 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தில் பக்கம் 02

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்: சுயாதீன விசாரணைக்கு உத்தரவு!

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பக்கச் சார்பற்ற சுயாதீன விசாரணை நடத்தி, உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதென்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக வெகுஜன அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

(விவரமான செய்தி 07ஆம் பக்கத்தில்..)

## ரின்மீன், பருப்பு, சீனி, வெங்காயத்துக்கான இறக்குமதி வரி நீக்கம்; விலையும் குறைப்பு

ரின் மீன், சீனி, பருப்பு மற்றும் வெங்காயம் ஆகியவற்றுக்கான இறக்குமதி வரியை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி வரி நீக்கப்படுவதால் நேற்று நள்ளிரவு முதல் மேற்படி பொருள்களின் விலையும் குறையவுள்ளது.

இதன்படி ரின் மீன் (பெரிய சௌமன் ரின்) ஒன்றை 200 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒருகிலோவை 100 ரூபாவுக்கும், சீனி ஒரு கிலோவை 85 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட ரூபா 500 இற்கு மேல் மதிப்புள்ள பொருள்களை, சதொச நிறுவனத்தில் கொள்வனவு செய்யும் பக்கம் 02

## இருபதைத் தமிழரின் கட்சிகள் ஆதரிப்பது நம் கண்களைத் நாங்களே குத்தும் வேலை

### எச்சரிக்கின்றார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்

(எஸ்.நிதர்ஷன்)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் பேசும் பிரதிநிதிகள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவைக் கொடுப்பது என்பது தங்களுடைய கண்களைத் தாங்களே குத்திக் கொள்வதாக அமையுமென்று தமிழ் மக்கள் தேசியகூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.வீ. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். பக்கம் 02

## 5, 000ஐ கடந்தது ‘கொரோனா’

### நேற்று 194 பேருக்குத் தொற்று உறுதி

கொழும்பு, ஒக். 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நேற்று மட்டும் 194 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பக்கம் 02

## பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலராக நியமிக்கப்பட்டார் காசிலிங்கம் கீதநாத்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளராக காசிலிங்கம் கீதநாத் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சித் தலை பக்கம் 02

## கடும்போக்குவாதிகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் நாடகமே ரிஷாத்தின் கைது முயற்சி

### சஜித் அணி எம்.பி. இம்ரான் மஹ்ரூப் விசனம்

கொழும்பு, ஒக். 14

அரசின் மீது அதிருப்தி அடைந்துள்ள கடும்போக்குவாதிகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் நாடகமே முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கைது முயற்சி.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.

'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்' என்று கற்பித்தவர் இயேசு. அதுதான் நடப்பது போல தோன்றுகின்றது.

பௌத்த, சிங்களத் தேசியவாதத்தைக் கிளப்பி விட்டு, அதில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ராஜபக்ஷக்கள் பௌத்த தேசியவாதத்தின் சரியான பக்கத்தை இப்போது தரிசிக்கத் தொடங்கியிருக்கின்றனர் எனலாம். அந்தப் பாடத்தை எவ்வளவு வலுவாக – எவ்வளவு விரைவாக – கற்கின்றனரோ அவ்வளவுக்கு நாட்டுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது.

ஆளும் தரப்பில் பேரினவாதச் சிந்தனையைப் பிரதிபலித்து வந்தவர்களுள் ஒருவர் விஜய தாஸ ராஜபக்ஷ.2018 இல் மஹிந்த ராஜபக்ஷ 52 நாள்கள் பிரதமராக இருந்த போது அந்த அரசில் கல்வி, உயர்கல்வி அமைச்சராக இருந்தவர் இந்த ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ. கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு எம்.பியானவர். அமைச்சரவைப் பதவியேற்பின் போது பல கனவுகளுடனும், எதிர்ப்பார்ப்புடனும் அதற்குப் புறப்பட்டுச் சென்றவர். ஆனால் தமக்கு ஒதுக்கப்பட்டது கல்வி இராஜாங்க அமைச்சுத்தான், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு அல்ல என அறிந்தும் வழியிலேயே வாகனத்தைத் திருப்பிக் கொண்டு வீடு திரும்பியவர். அப்போது முதல் ஆட்சிப் பீடத்தின் ராஜபக்ஷக்களுடன் முரண்டு பிடித்து வந்தார் விஜேதாஸ ராஜபக்ஷ.

இப்போது இருபதாவது திருத்த விடயத்தில் ஆளும் தரப்புக்குள் கிளர்ச்சியாளர்களின் பக்கத்தில் முதலாவது அரசியல் வேட்டை பகிரங்கமாகத் தீர்த்து, உள்கட்சிப் புரட்சியை ஆரம்பித்து வைத்திருப்பவர் அவர்தான். அதனால் ஆட்சியாளர்களான ராஜபக்ஷக்களின் கடும் எரிச்சலுக்கும் சீற்றத்துக்கும் உள்ளாகியிருக்கின்றார் விஜேதாஸ.

இருபதாவது திருத்தத்துக்கு ஒத்துழைக்க மறுத்து, பகிரங்கமாக அந்த அரசமைப்புத் திருத்தத்தை எதிர்க்கும் விஜேயதாஸவைக் கண்டிப்பதற்கு நேற்று பொதுஜன பெரமுனவின் கொழும்பு அலுவலகத்தில் செய்தியாளர் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

கொழும்பில் பொதுஜன பெரமுன சார்பில் வென்று நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விஜேதாஸ ராஜபக்ஷவைத் தாக்கிப் பேசுவதற்கு வந்த அரசியல் பிரமுகர்கள் யார் தெரியுமா? கடந்த பொதுத் தேர்தலில் பெரமுன (மொட்டுக் கட்சி) சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்படாத வேட்பாளர்கள் தான். இருபதாவது திருத்தத்திற்கு எதிராக ஆளும் தரப்புக்குள் கிளர்ச்சி செய்யும் பிரமுகர்களைக் கையாள்வதற்குக் கூட சரியான ஆள்கள் ராஜபக்ஷக்களுக்குக் கிடைக்க மாட்டார்கள் என்றால், இருபதாவது திருத்தத்தை ஆளும் தரப்பு முன்நகர்த்துவது கூட கஷ்டம்தான் என்று நினைக்கிறேன்.

இந்த விடயத்தில் தோல்வியைத் தவிர்ப்பதற்காக மீண்டும், இனவாதத்தை ஆளும் தரப்பு கையில் எடுக்கப் போகின்றது என்றே கொழும்பு வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான விவகாரத்தைக் கையில் எடுத்து அந்தப் பிரச்சினையை பூதாகரமான விவகாரமாக்கி, தேசிய சர்ச்சையை – விவாதத்தை – அந்த விடயத்தின் பக்கம் திருப்பினால், நாட்டின் முக்கிய கவனம் அதில் ஒன்றியிருக்க, மறுபுறத்தில் சத்தம் சந்தடியில்லாமல் இருபதாவது திருத்த விவகாரத்தை நகர்த்தி விடலாம் எனத் திட்டமிடுகின்றது ஆட்சித் தலைமை.

ஒவ்வொரு தடவையும் தேசியச் சிக்கல்களைச் சமாளிப்பதற்கு, இப்படி ஒரு விடயத்தின் கவனத்தை இன்னொன்றின் மீது திருப்பும் தந்திரோபாயமே பெரும்பாலும் கைக்கொள்ளப்படுகின்றது. அது இம்முறையும் வெற்றியளிக்குமா?

பொறுத்திருந்துதான் பாரக்க வேண்டும்.

– மின்னல் –

## இருபதைத் தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வாதிகார நிலைமையை ஏற்படுத்தும் 20 ஆவது திருத்தம் சிறுபான்மை மக்களுக்கே அல்லலையும் துன்பத்தையும் கொடுத்தொ பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துமென்று சுட்டிக்காட்டிய விக்கினேஸ்வரன் அதனை அனைவரும் இணைந்து எதிர்க்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

புதிதாக கொண்டு வரப்படும் 20 ஆவது அரசலமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவி வருமாறு: –

இந்த 20ஆவது திருத்தம் வந்தால் நாட்டிலே சரவாதிகாரம் தலைதூக்கும். இப்பொழுதே சர்வாதிகாரத்திற்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுத்தாகிவிட்டன. இவ்வாறான நிலைமையில் தற்போது 20 ஆவது திருத்தமும் வந்தால் கட்டாயம் சர்வாதிகார நிலைமை ஏற்படும்.

இது சிறுபான்மை மக்களுக்கு அல்லலையும் துன்பத்தையும் கொடுக்கும். ஏனென்றால் இந்த நாட்டின் தலைவராக இருப்பவர் இந்த நாடு என்பது சிங்கள, பௌத்த நாடு என்ற எண்ணணத்தைக் கொண்டவார்.

அப்படியானவர் தலைமையில் எப்படியாவது சிறுபான்மையினர் இருக்கும் இடங்களை ஆதி சிங்களவர் வாழ்ந்த இடங்கள் என்றும் பௌத்தம் இருந்த இடம் என்றும் சொல்லி காணிகளை கையேற்பதும் விகாரைகளைக் கட்டவதுமான பல விடயங்கள் நடக்கும்.

அதற்கு ஏற்ற மாதிரி வடகிழக்கில் படையினர் பெருவாரியாக இருக்கின்றனர. குறிப்பாக் முன்னர் 1லட்சத்திற்கு குறைவாக இருந்தவர்கள் இப்போது கூடவாக இருக்கின்றனர் போல் தெரிகிறது. இவ்வாறு பல பாதிப்புக்கள் சிறுபான்மை மக்களுக்கு ஏற்படும் ஆபத்து உள்ளது.

இவற்றை எல்லாம் பார்க்கின்ற போது இந்த திருத்தத்திற்கு மற்றவர்கள் எவரும் அதற்கு எதிரப்பு தெரிவிக்காவிட்டாலும் அரசாங்கத்தோடு தொடர்புடைய தமிழ் பேசும் பிரதிநிதிகள் இதனை எதிர்க்க வேண்டும். அதனை விடுத்து அதற்கு ஆத ரவை கொடுப்பது என்பது அவர்களுடைய கண்களை அவர்களே குத்திக் பொள்வதாக அமையும்.

மேலும் சர்வாதிகார நிலைமையை ஏற்படுத்தி சிறுபான்மை மக்களுக்கு பல வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இந்த திருத்தத்திற்கு ஆதரவை வழங்காது அனைவரும் எதிர்க்க வேண்டும். இந்த திருத்தம் தொடர்பிலும் நாடாளுமன்றில் பேச இருக்கிறேன். – என்றார்.

## ரிஷாத்தைக் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவைப் பெறுமாறு சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கமைய செயற்பட்ட குற்றப் புலனாய்வு பிரிவினர் கொழும்பு கோட்டை நீதிவானிடம் நேற்றுப் பிற்பகல் பிடியாணை கோரி விண்ணப்பம் செய்தனர்.

இதன்போது, பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் நபர் ஒருவரைக் கைது செய்ய பிடியாணை அவசியமில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்த நீதிவான், இது தொடர்பான வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்.

இந்தநிலையிலேயே ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்வதற்கு அவரின் கொழும்பு மற்றும் மன்னார் பகுதிகளில் அமைந்துள்ள இல்லங்களுக்கு 6 பொலிஸ் குழுக்கள் சென்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களைப் பயன்படுத்தி இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் வன்னி மாவட்ட வாக்காளர்களை வாக்களிப்பதற்கு அழைத்துச்சென்றிருந்தார் என்று ரிஷாத் பதியுதீன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதிவுத் திருமணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிபுரியும் வியாங்கொட பகுதியைச் சேர்ந்த மணப்பெண்ணுக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாப்பிளை உட்பட அந்தப் பதிவுத் திருமணத்துக்குச் சென்ற பதினான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி இளைஞரும், யுவதியும் கடந்த 2 ஆம் திகதி பதிவுத் திருமணம் செய்து கொண்டனர் எனவும், 9 ஆம் திகதி அந்தப் பெண்ணுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பியகம நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் சமன் பெரேரா தெரிவித்தார்.

மினுவாங்கொடைக்கு கடந்த 2ஆம் திகதி பதிவுத் திருமணம் செய்யத் தனது உறவினர்களுடன் இளைஞன் ஒருவர் சென்று திரும்பிய சில நாள்களில் குறித்த மணப் பெண்ணுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த இளைஞர் உட்பட அவருடன் சென்ற 14 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இவர்களுக்குப் பதிவு திருமணத்தைச் செய்து வைத்த சபுகஸ்கந்த – கோனவல பகுதியிலுள்ள திருமணப் பதிவாளர் மற்றும் திருமண சாட்சிக்குக் கையொப்பமிட்டவர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## ரின்மீன், பருப்பு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது ஒரு கிலோ பருப்பின் விலை ரூ. 150 இற்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தெங்கு அபிவிருத்தி சபை, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஆகியன தற்போது கொழும்பு நகரத்துக்கான தேங்காய் விநியோகத்தை அதிகரித்துள்ளன. எனவே, வாடிக்கையாளர்கள் சதொச விற்பனை நிலையங்களிலிருந்து நியாயமான விலையில் தேங்காய்களைப் பெற முடியும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் சுவை மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டே மக்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

## 5, 000-ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேணிய 129 பேரும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள 65 பேரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன்மூலம் மினுவாங்கொடை கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண் ணிக்கை 1,591 ஆக அதிகரித்துள்ளது. இதையடுத்த நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 38 ஆக உயர் வடைந்துள்ளது.

1,697 தொற்றாளர்கள் தற்போது நாடு முழுவதும் உள்ள 13 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் தொற்றுக்குள்ளா 3 ஆயிரத்து 328 பேர் குணமடைந்தும் 13 பேர் உயிரிழந்தும் உள்ளனர்.

## '20' வேண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து அதிகாரங்களும் தனி ஒருவர் வசமாவது ஜனநாயக நாட்டுக்குப் பாதகமான விடயமாக அமையும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்களின் உண்மையான ஜனநாயக நிலைப்பாட்டைக் காண்பிப்பதில்லை.

நாடாளுமன்றத்தின் அரசமைப்புப் பேரவையூடாக புதிய அரசமைப்பொன்றை உருவாக்க வேண்டும். பொருட்கோடலை மேற்கொள்ள முடியாத வகையில் குறைபாடுகளின்றி அதனைத் தயாரிக்க வேண்டும் – என்றுள்ளது.

அதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் அவசியமற்றது என இரண்டு பௌத்த பீடங்கள் நேற்றுமுன்தினம் விசேட கூட்டறிக்கையொன்றின் ஊடாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வராக இருந்தபோது காசிலிங்கம் கீதநாத் எதிர்க்கட்சித் தலைவரின் தகவல் மற்றும் தகவல்

தொடர்புபணிப்பாளராகவும், தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் முன்னாள் பிரத்தியேக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர், மஹிந்த ராஜபக்ஷ 2015 முதல் 2019 வரை இந்தியாவுக்கு மேற்கொண்ட அனைத்து சுற்றுப்பயணங்களையும் திட்டமிட்டு செயற்படுத்தி அதற்கான ஏற்பாடுகளை செய்தமையுடன், இன்று வரையான இந்திய – இலங்கையின் வலுவான இணைப்புக்களில் மிகமுக்கிய பங்கு வகிக்கும் ஒருவராகவும் உள்ளார்.

பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் மிக நெருக்கமாக நீண்டகாலம் பணியாற்றிவரும் கீதநாத் காசிலிங்கம் வடக்கு – கிழக்கு சார்ந்த அபிவிருத்தி விடயத்திலும் பிரதமர் சார்பில் நேரடியாக வேலைத் திட்டங்களை அமுல்படுத்தும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் சார்பில் யாழ்ப்பாணத்தைப் பின்னணியாகக் கொண்ட தமிழர் ஒருவர் ஒருங்கிணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டமை இதுவே முதல் முறை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## கடும்போக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணி தொடர்பான கலந்துரையாடலின் பின் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டைச் சர்வதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு பௌத்த பீடங்களே எதிர்ப்புத் தெரிவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. கத்தோலிக்க ஆயர் பேரவையும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன் ரியாஜ் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டமை, அரசை ஆதரித்த கடும்போக்குவாதிகள் மத்தியில் அரசின் மீது பாரிய சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது.

எனவே, அரசுக்கு எழுந்துள்ள இவ்வாறான எதிர்ப்புக்களைத் திசை திருப்பி கடும்போக்குவாதிகளைத் திருப்திப்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிாத் பதியுதீனைக் கைதுசெய்யும் நாடகம் ஒன்றை அரங்கேற்ற அரசு முயற்சிக்கின்றது.

இந்த அரசியல் பழிவாங்கல்களில் இருந்து அவரைப் பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் நாம் அவருக்குத் துணையாக நிற்போம்.

தற்போது பொருள்களின் விலைவாசி அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. பிழையான பொருளாதாரக் கொள்கையால் இதைச் சமாளிக்க முடியாமல் அரசு அவதியுறுகின்றது.

எமது அரசு அதிகரித்த பத்தாயிரம் ரூபா சம்பளத்தைக் கொண்டே அரச ஊழியர்கள் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் தமது வாழ்வைக் கொண்டு செல்கின்றனர். ஆனால், கூலித் தொழில் செய்யும் மக்களின் நிலையே கவலைக்கிடமாக உள்ளது. எமது அரசு பெற்றோல் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைத்தமையாலேயே அவர்களுக்கும் ஒரு வேளையாவது உண்ண உணவு கிடைக்கின்றது.

ஐம்பது கொரோனா நோயாளிகள் அடையாளம் கானப்பட்டபோதே நாட்டை முடக்கினார்கள். ஆனால், இன்று ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் அடையாளம் காணப்பட்டும் இதுவரை தொற்றில் இருந்து ஏனையவர்களைப் பாதுகாக்கத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை – என்றார்.

# ரிஷாத்தைக் கைதுசெய்வதற்கான முயற்சி முஸ்லிம்களைச் சீண்டிப் பார்க்கும் செயல்!

## முன்னாள் எம்.பி. நஸீர் காட்டம்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்வதற்கு சட்டமா அதிபர் ஊடாக அரசு ஆணை பிறப்பித்துள்ளமையானது முஸ்லிம்களைப் சீண்டிப் பார்க்கும் ஒரு செயற்பாடாகவே நோக்க வேண்டியுள்ளது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் ஆரம்ப வரலாற்றில் இருந்து இற்றை வரைக்கும் இலங்கை முஸ்லிம்கள் இலங்கைத் திருநாட்டுக்குத் தேசப்பற்றுடையவர்களாகவே இருந்து வருகின்றனர்.

ஆளும் கட்சியோ அல்லது எதிர்க் கட்சியோ ஏதோ ஒரு பெரும்பான்மைக் கட்சிக்குத்தான் தங்களது ஆதரவையும் நல்கி வருகின்றனர்.



ஆனால், தற்போதைய அரசானது சிறுபான்மை மக்களுக்குக் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் தங்களுக்குப் பாரியதொரு ஆதரவைத் தரவில்லை என்ற காரணத்தால் இப்போது அதற்கான பழிவாங்கல் நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிாத் பதியுதீனைக் கைதுசெய்வதற்கு சட்டமா அதிபர் ஊடாக அரசு ஆணை பிறப்பித்துள்ளமையானது முஸ்லிம்களைப் சீண்டிப் பார்க்கும் ஒரு செயற்பாடாகவே நோக்க வேண்டியுள்ளது. இது ஓர் ஜனநாயக நாடு – ஜனநாயகமான ஓர் அரசு என்றால் இவ்வாறான பழிவாங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் – என்றுள்ளது.

## யாழ். கடையிலிருந்த பெண்ணிடம் நான்கு பவுண் தங்கச் சங்கிலி அறுப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருள் கொள்வனவு செய்வது போன்று சென்ற இருவர் 4 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

யாழ். நகரின் மத்தியில் உள்ள சில்லறை விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை நேரம் பெண்மணி ஒருவரே விற்பனையில் ஈடுபட்டிருந்தார். இச் சமயம் ஓர் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரில் ஒருவர் இறங்கிச் சென்று 20 ரூபாவிற்கு பீடி கோரியுள்ளார்.

இவ்வாறு கோரிய பீடியை வழங்கிய சமயம் வர்த்தக நிலையத்தில் நின்ற பெண்மணி கழுத்தில் இருந்த 4 பவுண் தங்கச் சங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு வீதியில் இயங்கு நிலையில் இருந்த மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# மட்டு., அம்பாறை இணைப்பாளராக கருணாவை நியமித்தார் மஹிந்தர்



கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக உத்தியோகபூர்வமாக பதவியேற்றுள்ளார்.

பிரதமர் அலுவலகமான அலரிமாளிகையில் வைத்து அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) தனது பதவியை பொறுப்பேற்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு சுமார் 30ஆயிரம் அளவிலான வாக்குகளைப் பெற்ற தனக்கு, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கருணா அம்மான் கேட்டிருந்தார். இதற்கமைய பிரதமரால் இவ்வாறு பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதமரின் பெருந்தோட்ட இணைப்புச் செயலாளராக பதவி வகித்து வரும் செந்தில் தொண்டமானுக்கு தற்போது மேலும் ஒரு புதிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, செந்தில் தொண்டமானுக்கு பிரதமர் அலுவலகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி நேற்று மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்தவருக்கும் கொரொனா

கடந்த ஜூலை மாதம் மாலைத்தீவில் இருந்து இந்நாட்டுக்கு வருகை தந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நபரொருவருக்கு மீண்டும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கஹவத்தை வெல்லந்துர பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலையும் நிறைவு செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அவர் மீண்டும் மாலைத்தீவிற்கு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையின் போது அவருக்கு கொரோனா தொற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# மணிக்கு எதிரான வழக்கு வாபஸ்; சபை அமர்வில் பங்கேற்க அனுமதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வில் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பங்குகொள்ளத் தடையாக விருந்த வழக்கு 27 மாதங்களின் பின்பு கைவாங்கப்பட்டதால் இதுவரை நிலவிய தடையும் நீங்கியது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கக் கட்டளையிடுமாறு கோரி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நீதிப் பேராணை மனு நேற்று மீளப்பெறப்பட்டது.

பிரதிவாதி விஸ்வலிங்கம் மணி வண்ணனுக்கு மாநகர சபை உறுப் புரிமை வழங்கிய கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

அதனால் இந்த மனுவின் ஊடாக நீதிமன்றின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதனால் வழக்குச் செலவு இன்றி மனுவை மீளப்பெற மனுதாரர் முடிவு செய்துள்ளார் என்று மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றுரைத்தார்.

மணிவண்ணன் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட விடயத்தை நான் அறியவில்லை. ஆனால், மனுதாரரின் விண்ணப்பத் துக்கு ஆட்சேபனையில்லை என்று மணிவண்ணன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விஜித்சிங் மன்றுரைத்தார். அதனால் மனுதாரரின் விண்ணப்பத் துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லையில் வதியும் வாக்காளர் ஒருவரினால் 2018ஆம் ஆண்டு 217/2018 இலக்கத்தின் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சி சபைத் தேர்தல் விதியை மீறும் செயல் என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அந்தப் பதவியி லிருந்து நீக்கி கட்டளையிட வேண்டும் என மனுதாரர் மனுவில் கோரியிருந்தார்.

மனுதாரர் கோரிய இடைக்கால நிவாரணங்களில் ஒன்றான, மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வுகளில் பங்கேற்க உறுப்பினர் வி.மணிவண்ணனுக்குத் தடையுத் தரவை மேன்முறை யீட்டு நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு ஓகஸ்டில் வழங்கியது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது அதனை மனுதாரர் மீளப்பெற்றார். இதன் மூலம் யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் பங்குகொள்ள மணிவண்ணனுக்கு நிலவிய 27 மாத இடைக்காலத் தடை நீங்கியுள்ளது.

# சுகாதார நடைமுறையை முழுமையாக பின்பற்றுக!

## பொதுமக்களுக்கு அரசு கோரிக்கை

சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

உலக மக்களை பெருமளவில் அச்சுறுத்திவரும் இந்த தொற்று பரவலை கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை தொடர்ந்தும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது.

இந்த நிலையை தக்கவைத்துக்கொள்வதுடன் இந்த வைரஸைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்குக் காணப்படுகின்றது.

இதுதொடர்பாகத் திடமான நம்பிக்கையை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

திவுலப்பிட்டிய மினுவாங்கொடையில் உள்ள தனியார் நிறுவனங்கள் மூலமான வைரஸ் கொத்தணியில் இதுவரையில் ஆயிரத்து 394 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

24 ஆயிரத்து 778 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 10 ஆயிரத்து 281 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாளாந்தம் இந்தத் தொற்று தொடர்பில் அரசாங்கம் கண்காணித்து வருகின்றது. இதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது மக்கள் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதில் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டி ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதுடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இருபதை எதிர்ப்பதற்கு மத பீடங்கள் கடைசி வரைக் காத்திருந்தமை ஏன்?

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முக்கியத்துவமானது. குறிப்பாக ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிக்க முடியாது, தேர்தல் ஆணையாளர்களின் சுயாதீன செயற்பாட்டுக்குக் குந்தகமான பிரிவுகளுக்கு இடமளிக்க முடியாது என்பவை போன்ற விடயங்களில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மெச்சத்தக்கது.

ஆனாலும் கூட இருபதாவது அரசமைப்புத் திருத்த நகல் வரைவில், அதன் அடிப்படைக் கட்டமைப்பில் உயர் நீதிமன்றம் கைவைக்கவே இல்லை என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானத்தின்படி, சமர்ப்பிக்கப்பட்டுள்ள இருபதாவது அரசமைப்புத் திருத்தத்ததில் அங்கொன் றும், இங்கொன்றுமாகத் திருத்தங்களைச் செய்வதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் அதை நிறைவேற்றி விடலாம் என்ற நிலைமையே உள்ளது.

ஆனால், இருபதாவது திருத்தத்துக்கு எதிர்பாராத தரப்புகளில் இருந்து முளைத்துள்ள எதிர்ப்பையும், அது தீவிரமடைந்து வரும் போக்கையும் நோக்கினால் இப்போதைய நிலைமையில் அதனை நிறைவேற்றுவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையாகத்தான் போய் முடியும் போலத் தோன்றுகின்றது.

நாட்டின் நான்கு பெரிய பௌத்த பீடங்களில் இரண்டான அமரபுர நிக்காய மற்றும் ராமன்ய நிக்காய இரண்டும் இருபதாவது திருத்தத்தைக் கடுமையாக ஆட்சேபித்துள்ளமை மட்டுமல்லாமல் அதை எதிர்த்தும், அதற்கான காரணங்களை வரிசைப்படுத்தியும் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்தத் திருத்தத்தைப் பிய்த்து உதறியிருக்கின்றன.

பலரும் எதிர்பார்த்தபடி, பௌத்த மத பீடங்களைத் தொடர்ந்து இப்போது கிறிஸ்தவ மதத் தலைவர்களும் இருபதாவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருக்கின்றார்கள்.

அதைத் தொடர்ந்து மற்றைய இரு பௌத்த பீடங்களான அஸ்கிரிய நிக்காய மற்றும் மல்வத்தை நிக்காய ஆகியவையும் இந்த நிலைப்பாட்டுக்கு வந்து, இருபதாவது திருத்தத்தை எதிர்க்கும் களத்தில் குதிக்கக் கூடும் என்கின்றன சில வட்டாரங்கள்.

அப்படி நடக்குமானால் கோட்டாபய ராஜபக்ஷ அரசு தனது ஆட்சியில் மிக முக்கிய அரசியல் நெருக்கடியைச் சந்திக்கப் போகின்றது என்பதுதான் அர்த்தம்.

இலங்கை அரசியலில் பௌத்த மத பீடங்கள் அளவுக்கு அதிகமாகவே தலையீடு செய்து வந்திருக்கின்றன என்பதுதான் சுதந்திர இலங்கையின் சரித்திரமாகும்.

அதுவே இலங்கையின் சாபக்கேடு என்று தமிழர்கள் உட்படப் பல தரப்பினரும் விசனம் தெரிவித்து வந்தாலும், இன்று சர்வாதிகார ஆட்சி ஒன்று மலர்வதற்கு எதிரான நடவடிக்கைகளில் பௌத்த மத பீடங்களும் தம்மாலான – நியாயமான –பங்களிப்பை வழங்குகின்றபோது அதனையும் சேர்த்து வரவேற்க வேண்டிய கட்டாயம் பொதுநலன் விரும்பிகள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இருபதாவது அரசமைப்புத் திருத்த விடயத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விவகாரம் ஒன்றுதான். அது – இந்தச் சட்டம் ஜனாதிபதி என்ற தனி மனிதரை நாட்டின் சர்வாதிகாரியாக்கி விடும் என்பதுதான். அதுவும், தேர்தல் அரசியலில் இதுவரை சம்பந்தமேபடாத ஓர் இராணுவ அதிகாரியை திடுதிப்பென ஜனாதிபதி பதவிக் கதிரையில் இருத்தி விட்டு, இந்த அதிகாரங்களை முடியாக அவருக்குச் சூட்டுவது, நாடு தனக்குத் தானே கொள்ளி வைக்கும் வேலையாகும். நாட்டை இராணுவ ஆட்சி நிலைக்குத்தான் கொண்டு போவேன் என்பதைத் தனது தொடர் செயல்கள் மூலம் நிரூபித்து வரும் ஒருவரின் கைகளில் இருபதாவது திருத்தத்தில் கூறப்படும் அதிகாரங்களைக் கையளித்தால், கடைசியில் விவகாரம் 'கல்லுளி மங்கன் போனவழி காடுமேடெல்லாம் தவிடு பொடி' என்பதாகத்தான் முடியும் என்பது ஓரளவு ஊகிக்கத்தக்கதே.

அதைக் கவனத்தில் கொண்டே பௌத்த மத பீடங்களும், கிறிஸ்தவ ஆயர்கள் மன்றமும் இது போன்ற நிலைப்பாட்டை அவசர அவசரமாக எடுத்து நாட்டைக் காப்பாற்ற முயல்கின்றன என்பது திண்ணம்.

என்றாலும், இது கூட காலம் பிந்திய செயற்பாடுதான். இருபதாவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நீதிமன்ற விசாரணைகளும் முடிவுற்று, உயர்நீதிமன்றத் தீர்மானம் பகிரங்கமான பின்னர், இரண்டாம், மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் அது எடுக்கப்படவிருக்கும் கடைசி நேரத்தில்தான் ஒடி முழித்திருக்கின்றன மத பீடங்கள்.

இதுவரை அத்தரப்புகள் தூங்கிக் கிடந்தமைக்கான காரணம் மர்மமாக இருப்பது மறுக்கக் கூடியதல்ல.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு செல்வம் அடைக்கலநாதன் கண்டனம்!



முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்ட விரோதமான முறையில் தேக்கு மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுகின்றன எனத் தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மற்றும் ஊடகவியலாளர் குமணன் ஆகியோர் மீதே இந்தத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மரக்கடத்தில் ஈடுபட்ட முறிப்பு பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனவும் தாக்குதல் நடத்திய நபர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் 20 இற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் வனவளத் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் ஆதரவுடனேயே இந்த மரக்கடத்தல் இடம்பெறுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இயற்கையை அழித்து எங்களையே அடித்துக்கொள்ளும் இனமானோம் நாம்.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் யார் இவர்களின் பின்னணி என்ன என்பதைக் கண்டறிந்து, பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் நலன் பெற வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிவரும் காலங்களில் எமது பிரதேசத்தில் நடைபெறக்கூடாது என்பதே எமது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் நோக்கமாகும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச, தனியார் ஊழியர்களின் தகவல்களைப் புதுப்பிக்கவும்!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கோரிக்கை



அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவையாற்றும் அனைத்து ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களை புதுப்பித்துகொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அந்தத் தகவல்களை எதிர்வரும் 3 தினங்களுக்குள் திரட்டுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போதைய நிலைமையின் அடிப்படையில் தேவை ஏற்படின் புலனாய்வு பிரிவுக்குத் தகவல்களை வழங்குவதற்கு நிறுவன பிரதானிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொள்ளுப்பிட்டி ஆடைத் தொழிற்சாலை ஊழியர் 7 பேருக்கு கொரோனா தொற்று!

*கொள்ளுப்பிட்டியிலுள்ள, ப்ரெண்டிக்ஸ் தலைமையக ஊழியர்களிடம் நடத்தப்பட்ட கொரோனா பி.சி.ஆர்.பரிசோதனையில் 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*அவர்களில் ஒருவரின் மனைவி இரத்மலானை அரச வங்கியில் பணிபுரிகின்ற நிலையில், குறித்த வங்கி தற்காலிகமாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மூடப்பட்டுள்ளது.*

*அத்துடன், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோருடன் நெருங்கிப் பழகியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

## மினுவாங்கொடையில் கொரோனா பரவல் ஆராய்வதற்கு விசேட குழு நியமிப்பு!

மினுவங்கொடை ஆடை தொழிற்சாலையில் கொரோனா வைரஸ் தொற்று எவ்வாறு பரவியது என்பது தொடர்பாக ஆராயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவை தொழிற்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமித்துள்ளார்.

தொழில் ஆணையாளர் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பதிரன தெரிவித்தார்.

மினுவங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கடந்த 5 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் என ஆயிரத்து 397 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரதின ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்குக் குழு!

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் மற்றும் ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இதற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தினேஸ் குணவர்தன, ஜனக பண்டார தென்னக்கோன், கெஹலிய ரம்புக்வெல, சமல் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நாட்டில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்!

## ஜனாதிபதிக்கு மகஜர்

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட ஊடகவிய லாளர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக இந்தக் கடிதம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்கள் இருவர் நேற்றுமுன்தினம் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாக கண்டனங்கள் வெளிவரும் நிலையில், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற் றும் அவர்களின் சுய கௌரவத்தைப் பாதுகாத்துத் தருமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர்கள் –

சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள் மௌனம் காப்பதானது இலங்கையில் ஊடக சுதந்திரத்தை மீண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சம்பவம் போன்று பல சம்பவங்கள் கடந்த சில காலமாகத் தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றன.

இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கில் ஊட கவியலாளர்கள் அச்சுறுத்தப்படல் மற்றும் அரசி யல் ரீதியாக பழிவாங்கல்களுக்கு உள்ளாதல் போன்ற சம்பவங்கள் இனியும் தொடராத வகையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, அவர்களின் குடும்ப மற்றும் தனி மனித கௌரவம் ஆகியவற் றைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய தார்மீக கடமை தங்களிடம் உள்ளது.

இயற்கைக்கு எதிரான மனித செயற்பாடுகள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படும் ஊடகவியலா ளர்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காததும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கண்காணிக்காத தும் போன்று செயற்படும் அரச அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். – என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தலவாக்கலை – டயகம பிரதான வீதி போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது





தலவாக்கலை – டயகம பிரதான வீதியில் லிந்துலை – அகரகந்தை பகுதியில் மரம் வீழ்ந்ததால் தடைப்பட்டிருந்த போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

இந்தப் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதி காலை பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததால், அவ்வீதி யினூடான போக்குவரத்து தடைபட்டது.

இதனையடுத்து அப்பிரதேசவாசிகள் மற்றும் லிந்துலை பொலிஸார் ஆகியோர் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத் தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் போக்குவரத்து வழ மைக்கு திரும்பியதாகத் தெரிவித்தார்.

குறித்த மரம் முறிந்து வீழ்ந்ததால் சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு மேலாக போக்குவரத்து தடைபட்டி ருந்தது. இதனால் டயகம, அக்கரப்பத்தனை, மெராயா ஆகிய பகுதிகளுக்கு சென்ற பொதுமக்கள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கினர்.

அத்தோடு தொலைபேசி இணைப்புகள் மீது மரம் முறிந்து வீழ்ந்ததால், அப்பகுதிக்கான தொலைதொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் பொலிஸார் விசேடசோதனை நடவடிக்கை



மட்டக்களப்பு நகர் பகுதியில் மக்கள் சுகாதார வழிமுறை களை பின்பற்றுகின்றனரா என்பது தொடர்பாக பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில், மக்கள் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார வழி முறைகளை பின்பற்றுவது கட்டாயம் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், மட்டக்களப்பில் சுகாதார வழிமுறை களை மக்கள் கடைப்பிடிக்கின்றனரா என்பதை அறிவ தற்காக இந்த சோதனை நடவடிக்கை நேற்று (செவ்வாய்க் கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறியின் ஆலோ சனைக்கு அமைய இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் பிரகாரம் நேற்று காலை 8 மணிமுதல் மட்டக் களப்பு நகர், திருகோணமலை வீதி, கல்லடி பாலம், பொதுச் சந்தை, பஸ் தரிப்பு நிலையம், ரயில் நிலையம் போன்ற மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது முகக்கவசம் அணியாது பயணிப்பவர்க ளுக்கு அறிவுரை வழங்கப்பட்டமையுடன், இனிமேல் முகக் கவசம் அணியாது பயணிக்கக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## அதிவேக நெடுஞ்சாலை ஒரு நிறுவனத்தின் கீழ்!

### அமைச்சரவை அனுமதி

அதிவேக வீதிகளை ஒரு நிறுவனத் தின் கீழ் கொண்டுவரும் தீர்மானத் துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

அனைத்து அதிவேக வீதிகளும் ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு திறைசேரி செயலாளரால் தனி உரிமை வழங்கும் அதிவேக வீதி முதலீட்டு நிறு வனமொன்றை ஸ்தாபிப்பதற்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதிவழங்கி யுள்ளது.

## சமூக இடைவெளியை பின்பற்றாமல் வவுனியா பொது வைத்தியசாலை!

### பொதுமக்கள் குற்றச்சாட்டு





வவுனியா பொது வைத்தியசாலையில் சமூக இடைவெளி பேணப்படாமல் சிகிச்சைகள் வழங்கப் பட்டு வருகின்றன என பொதுமக்கள் குற்றம் சாட் டுகின்றனர்.

கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டில் பரவலடைந்து வரும் நிலையில், பொதுமக்கள் சமூக இடைவெளி யைப் பேணி சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வவுனியா பொது வைத்தியசா லையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வருகை தரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், அங்கு சமூக இடைவெளி கடைப்பிடிக்கா மல் அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வழங் கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சில சிகிச்சைப் பிரிவுகளில் போதிய இடவசதி இன்மையால் அதிகமான நோயாளர்கள் வருகைதரும்போது நெருக்கடியான நிலையும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலைமையால் கொரோனா வைரஸ் தாக் கம் இலகுவில் பரவலடையக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், அனைவரதும் நலன்கருதி மாற்று ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 6 வர்த்தக நிலையங்கள் மொனராகலவில் பூட்டு!

### கொரோனா அச்சத்தால்

பொரளையில் உள்ள 06 வர்த்தக நிலையங்கள் தற் காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சிலர் வந்து சென்றமை காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பேருவளையில் சுனாமி பொய் தகவல் பரவல்

பேருவளையில் சுனாமி ஏற்படப் போவதாக சமூக வலைத்தளங்களில் வெளி யாகும் தகவலில் உண்மை யில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையம் இந்த விடயத்தைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேருவளை கடற் பிராந் தியத்திற்குட்ட பகுதிகளில் சுனாமி ஏற்படப் போவதாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்போது பரவும் கொரோனா வைரஸ் வேகமாகத் தொற்றும் ஆற்றல் உடையது!

### சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார

நாட்டில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் ஏனையவர்களுக்கு இலகுவில் தொற்றக்கூடிய தன்மையைக் கொண்டது என சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித் துள்ளார்.

நாட்டில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய வைரஸை ஆராய்ந்துள்ள விசேட நிபுணர்கள், இந்த வைரஸ் மிக அதிகளவான பரவும் தன்மை கொண்டது என எச்சரித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ்நோய் எதிர்ப்பு சக்தியை முறியடித்து வைரஸை உருவாக்கக்கூடியது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதன் காரணமாக மக்களை அனைத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு வேண்டு கோள் விடுத்துள்ள அவர், வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமா றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘கொரோனா’வுக்கு முடிவு கட்டும் சக்தி கோட்டாபய அரசுக்கு உண்டு

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் ரமேஷ் பத்திரண

கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் நாட்டில் பரவுவதை முழுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் சமகால அர சுக்கு இருக்கின்றது.

– இவ்வாறு பெருந்தோட்டத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஷ் பத்திரண இன்று தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று காலை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக மக்களைப் பெருமளவில் அச் சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை தொடர்ந்தும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. இந்தநிலையைத் தக்கவைத்துக் கொள்வதுடன் இந்த வைரஸைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான சமகால அரசுக்கு இருக்கின்றது. இதில் திடமான நம்பிக்கையை அரசு கொண்டிருக்கின் றது. இதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

திவுலப்பிட்டிய, மினுவாங்கொடை யில் உள்ள தனியார் நிறுவனங்கள் மூலமான கொரோனா வைரஸ் கொத்தணியில் இதுவரையில் 1,394 பேர் தொற்றுக்குள்ளானமை பதிவாகியுள்ளது. 24 ஆயிரத்து 778 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 10 ஆயிரத்து 281 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாளாந்தம் இந்தத் தொற்று தொடர்பில் அரசு கண்காணித்து வருகின்றது. இதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுமக்கள் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டி ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதுடன், அரசின் இந்த நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – என்றார்.

# 35 பயணிகளுடன் பஸ்ஸில் பயணித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று!

கடவத்தையிலிருந்து காலிக்கு பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணொருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அந்த பஸ்ஸில் பயணம் செய்த ஏனைய 35 பயணிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக ஒக்ரோபர் நான்காம் திகதி கடவத்தையிலிருந்து காலிக்குச் சென்ற பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணே கொரோனா வைரஸிஜல் பாதிக்கப்பட்டுள்ளமை சோதனையின்போது உறுதியாகியுள்ளது.

மினுவங்கொட ஆடைதொழிற்சாலை ஊழியர் ஒருவரே இவ்வாறு பஸ்ஸில் பயணம் செய்துள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவருடன் பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள் அவர்களைத் தங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனினும் பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் மாத்திரமே தங்களை தொடர்புகொண்டுள்ளனர் எனவும் அவர்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த 35 பயணிகள் இன்னமும் தங்களை தொடர்புகொள்ளவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அதிகாரியொருவர், அவர்களால் அவர்களுக்கும் சமூகத்திற்கும் ஆபத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு மீனவர்கள், கப்பல் ஊழியர்கள் ஆகியோருடன் தொடர்புகளை பேணவேண்டாம்

## கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை

வெளிநாட்டு மீனவர்கள் மற்றும் கப்பல் ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேண வேண்டாம் என உள்நாட்டு மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் திணைக்களத்தால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாவிடின், எதிர்காலத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளை விதிக்க நேரிடும் எனவும் அந்த திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக வடக்கு கடற்பரப்பு ஊடாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெருமளவானமஞ்சள் கடத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# மஞ்சள் தட்டுப்பாடு தற்காலிகமானது!

## அரசு அறிவிப்பு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மஞ்சளுக்கான தட்டுப்பாடு தற்காலிகமானது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அப்படி இருந்தும் இறக்குமதி செய்துள்ளனர். அவற்றை மீள ஏற்றுமதி செய்வது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது மஞ்சளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை ஏற்கின்றோம்.

இதற்காக நுகர்வோரிடம் மன்னிப்பு கோருகின்றோம். எனினும் 2021ஆம் ஆண்டளவில் உள்நாட்டு உற்பத்தியே போதுமானதாக இருக்கும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள் பிற்போடப்பட்டன

திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன என இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஏற்கனவே திட்டமிடப்பட்ட பதிவு மற்றும் மீள்பதிவு நடவடிக்கைகள் தொடரும் என திறந்த பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறே ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னரே பரீட்சைகள் தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திட்டமிடப்படும் பரீட்சைகள் தொடர்பாக ஒருவார கால குறுகிய காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தினது இணையத் தளத்தில் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்படுகின்றது.

# புதிதாக அடையாளங்காணப்பட்ட தொற்றாளர் புத்தகக் கண்காட்சிக்குச் சென்று வந்தவராம்!

புதிய கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ள மற்றுமொருவர் கொழும்பு புத்தகக் கண்காட்சிக்கு சென்று வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதியே இவர் புத்தகக் கண்காட்சிக்கு சென்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் மனைவி வைத்தியர் எனவும், அவர் பிரசவ விடுமுறையில் இருக்கின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரன்டிக்ஸ் நிறுவனத்தில் தொழில்புரியும் இந்த நபர், கல்கிஸ்ஸ – படோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், அவர் கொள்ளுப்பிட்டியவிலுள்ள பிரண்டிக்ஸ் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்துக்கும் சென்று வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானிலிருந்து அரிசி இறக்குமதிக்கு அனுமதி!

பாகிஸ்தானில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாகிஸ்தானில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வருடாந்தம் 6 ஆயிரம் மெற்றிக் தொன் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# பத்திரிகையாளர் மீதான தாக்கு அருவருப்பான ஒரு செயற்பாடே!

## சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை

முல்லைத்தீவு பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் அருவருப்பானது என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஊடக இயக்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் –

முல்லைத்தீவு முறிப்பு காட்டுப் பகுதியில் நடந்ததாகக் கூறப்படும் மரக் கடத்தல் நடவடிக்கை தொடர்பாகத் தகவல் சேகரிக்கச் சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் மரக் கடத்தல்காரர் உள்ளிட்ட குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இரு ஊடகவியலாளர்களும் முல்லைத்தீவு நீதித்துறை, மருத்துவப் பொலிஸ் பிரிவில் புகாரமுறைப்பாடு செய்து, சிகிச்சைக்காக முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் ஐந்தாம் இலக்க விடுதியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் அழிவு பற்றிய செய்திகளை அடிக்கடி ஊடகங்களில் காண்கிறோம். இந்தப் பின்னணியில் இதில் ஈடுபடுவோர் மீது வலுவான சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இந்த சட்டவிரோத செயல் தொடர்பாக அறிக்கையிடச் செல்லும் ஊடகவியலாளர்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மேலும், மொனராகலை கும்புகன் ஓயா பாலம் அருகே சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையை அறிக்கையிடச் சென்ற இந்துனில் விஜேநாயக்க என்ற பத்திரிகையாளரும் ஒக்ரோபர் மூன்றாம் திகதி சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இதுபோன்ற விரும்பத்தகாத சூழ்நிலைகளை எதிர்கொள்ளாமல் ஊடகவியலாளர்கள் தங்களது கடமைகளை சுதந்திரமாகத் தொடர வேண்டுமானால், குறிப்பிட்ட நபர்கள் மீது தகுதி, தராதரம் பாராமல் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுதந்திர ஊடக இயக்கம் அகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது. – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# துப்பாக்கியை மறைத்து எடுத்து சென்றவர்கள் அம்பாறையில் கைது!

மோட்டார் சைக்கிளில் இரு துப்பாக்கிகளை மறைத்து எடுத் துச்சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் திருக் கோவில் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சோதனைச்சாவடி ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன் போது சந்தேக நபர்கள் இருவரும் பல்சர் ரக மோட் டார் சைக்கிளில் இரு துப்பாக்கிகளையும் சூட்சுமமாக மறைத்து அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் பகுதிக்கு எடுத்துச் செல்லும் போது சோதனைச் சாவடியில் வைத்து கைதாகினர்.

இவ்வாறு கைதானவர்கள் ஆலையடிவேம்பு, பொத்துவில் பகுதியை சேர்ந்த 49 மற்றும் 37 வயதை உடையவர்களாவர்.

கைதானவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள், மீட்கப்பட்ட இரு துப்பாக்கிகள் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் ஊடக சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல்!

## சி.வீ.கே.சிவஞானம் காட்டமான அறிக்கை



ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு முறிப்பு பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன எனக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பிரதேசத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களான சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகியோர் மீது அந்தப் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபடும் நபர்களால் கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவர்களின் புகைப்படக்கருவிகள் என்பன பறிக்கப்பட்டு புகைப்படம் மற்றும் காணொலிகள் என்பன அழிக்கப்பட்டிருந்தன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டை தாம் வன்மையாக கண்டிப்பதோடு, இது ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களை பொலிஸார் உடடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் அவர் அந்த அறிக்கையில் சி.வீ.கே. கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்: சுயாதீன விசாரணைக்கு அரசு உத்தரவு!



முல்லைதீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைதீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி, உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழுங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# மழையுடனான காலநிலை நாட்டின் சில பகுதிகளில்!

நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டளவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது வெளியிட்டுள்ள அறிக்கையில் -

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் வேளையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**மழை நிலைமை:** புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காங்கேசந்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம்வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**காற்று:** நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 35 - 45 கிலோ மீற்றர் வரை காணப்படும். காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நீர்கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடல் நிலை:** காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக அல்லது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். நீர்கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாக அல்லது கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கை மீறிய 124 பேர் கைது!

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவைமீறிய 124 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

34 வாகனங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்று(செவ்வாய்கிழமை) காலை ஆறு மணிவரையான காலப்பபகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கொரோனாவின் கொடூரத்தை நாட்டுமக்கள் உணரவில்லை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேதனை

கொழும்பு, ஒக்.14

கொரோனா வைரஸின் கொடூரத்தை நாட்டு மக்கள் இன்னும் உணரவில்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

பெரு நாடு ஆரம்பத்தில் மிகவும் சிறப்பான முறையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியது, எனினும், அதன்பிறகு அந்நாட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளையும், அரச அறிவித்தல்களையும் உரியவகையில் கடைபிடிக்காதமையால் வைரஸ் வேகமாக பரவியது. சனத்தொகை அடிப்படையில் ஒப்பிட்டால் அந்த நாட்டில்தான் அதிக மரணங்களும் இடம்பெற்றுள்ளன.

எமது நாட்டிலும் கொரோனா வைரஸ் பரவலை நாம் சுமார் ஒன்றரை மாதங்களில் கட்டுப்படுத்தினோம். ஏனைய நாடுகளில் கிராமத்துக்கு கிராமம் மரணங்கள், குடியிருப்புகளில் மரணங்கள் என வைரஸின்கொடூரத்தன்மைஉணரப்பட்டது.

இங்கு 13 பேர்தான் உயிரிழந்துள்ளனர். கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் 2 ஆவது இடத்தில் இருக்கின்றோம். எனவே, இந்த வைரஸின் கொடூரத்தன்மையை நாட்டு மக்கள் இன்னமும் உணரவில்லை.

அதனால்தான் சிலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுகின்றனர். இதுவரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறுபவர்கள்தான் கைது செய்யப்பட்டனர்.

புதிய வர்த்தமானி அறிவித்தல் வந்ததும் பொதுவெளியில் சமூக இடைவெளியைப் பின்பற்றாதவர்கள், முகக்கவசம் அணியாதவர்கள், சுகாதார நடைமுறைகளை பின்பற்ற மறுப்பவர்கள் என அனைவரும் கைது செய்யப்படுவார்கள்.

அப்பாவி மக்களை ஒடுக்குவது இதன் நோக்கம் அல்ல, மாறாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதேஎமதுஇலக்காகும்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நீடிக்குமா அல்லது தளர்த்தப்படுமா என்பது மக்களின் நடத்தையிலேயே தான் தங்கியுள்ளது. உரிய வகையில் சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்றுவார்களானால் சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என்பதுடன், சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மேலும் 61 பேர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 61 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அதற்கமைய டோஹா கட்டாரிலிருந்து 48 பேரும் அபுதாபியிலிருந்து 8 பேரும் இந்தியாவிலிருந்து ஐவரும் நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையக் கட்டடங்களில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியைக்குக் கொரோனா மாணவர்களுக்கு பி.சி.ஆர்.!

*சீதுவ, ஆண்டியம்பலம பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் இரண்டாம்வருட மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியை ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக அந்தப் பாடசாலையின் மாணவர்கள் பீ.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.*

# மன்னாரில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தொற்றுநீக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு!

கொரோனா தொற்று காரணமாக மன்னார் மாவட்டத்தில் முடக்கப்பட்டிருந்த இரண்டு கிராமங்கள் மீளத் திறக்கப்பட்டுள்ள நிலையில், மன்னாரின் பல பாகங்களிலும் நேற்று காலை முதல் தொற்று நீக்கும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகர சபை ஆகியவை இணைந்தே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டன.

மன்னார் பெரியகடை பகுதியில் மூடப்பட்ட வர்த்தகநிலையம், அதனை சார்ந்த பகதிகள், மன்னார் புதிய பஸ் தரிப்பிடம் மற்றும் பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளிலேயே இதன்போது தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா அச்சுறுத்தல் மத்தியில் தேர்தல் நடந்தமைக்கான காரணம்!

## விளக்குகின்றார் பீரிஸ்



ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை மக்கள் நிராகரித்த காரணத்தாலேயே, கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பொதுத் தேர்தலை நடத்தினோம் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

கொரோனா பரவலுக்கு முகம்கொடுக்க, எந்த வைத்திய முறைமை சரியானது என எம்மால் கூற முடியாது.

நாம் கொரோனாவுக்கு மத்தியில்தான் பொதுத் தேர்தலை நடத்தினோம். நாம் இதனை நடத்தாமல் போயிருந்தால், மக்களால் தற்போது நிராகரிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சிதான், இன்றும் ஆட்சியில் இருந்திருக்கும்.

அவர்களுக்கு 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். எனினும் அவர்களை மக்கள் நிராகரித்துவிட்டனர் என்றுதான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுத் தேர்தலை நடத்தினார்.

இதன் பிரதிபலனாகத்தான், ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று ஓர் ஆசனம்கூட இல்லாது போயுள்ளது.

கொரோனாவைக் காரணம் காட்டி, பொதுத் தேர்தலை நடத்தாமல் இருந்திருந்தால் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஓர் ஆட்சிதான் இன்றும் இருந்திருக்கும்.

நாம் தற்போது கொரோனாவைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக சுதேச, ஆயுர்வேத வைத்தியர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வது ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதே எமது நோக்கமாகும். இதில் பிழைகள் ஏதும் கிடையா. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெடிமருந்து உள்ளிட்ட பொருள்கள் யாழ். நகரப் பகுதியில் மீட்கப்பட்டன

*யாழ்ப்பாணம், ஒக்.14*

*யாழ்ப்பாணம், சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பின்பகுதியில் உள்ள குளத்திற்கு அண்மையில் இருந்து வெடிமருந்துகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.*

*ஆர்.டி.எக்ஸ் மற்றும் ரி.என்.ரி மருந்து கலக்கப்பட்ட நான்கு கிலோ மூன்று கிராம் எடையுள்ள வெடிமருந்துப் பொதி மற்றும் 10 ரெடினேட்டர்கள் என்பன விசேட அதிரடிப் படையினரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) கண்டெடுக்கப்பட்டன.*

*விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்த வெடி மருந்துகள் எடுக்கப்பட்டுள்ளன.*



*யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையின் பொலிஸ் பரிசோதகர் எம்.ஏ.பகட் தலைமையிலான குழுவினரே இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டமையுடன் வெடிமருந்தையும் கண்டெடுத்தனர். இந்நிலையில், குறித்த வெடிமருந்து உள்ளிட்ட பொருள்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

# 20 ஐத் தோற்கடிப்பதற்கு அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்போம்!

## ராஜித திட்டவட்டம்

**கொழும்பு, ஒக்.14**

**20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிக்கத் தேவையான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –**



**நான் 40 வருடங்கள் அரசியலில் இருப்பவன். எனக்கு உண்மையானவர்கள் என அதிகமானோர் உள்ளார்கள்.**

**அதேநேரம், 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிக்க வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாக இருக்கிறோம்.**

**இதற்கான சமரை நாம் ஆரம்பித்துள்ளோம். சர்வாதிகாரம் என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் பொதுவான எதிரியாகும். இதனை தோற்கடிக்க வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் நாம் முன்னெடுப்போம். – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.**

# ஊடகவியலாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் அரசு

## கண்டன அறிக்கையில் தமிழரசுக் கட்சி வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக்.14

ஊடகவியலாளரதும், ஊடகத்துறையினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசு கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவில் இரு ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்து இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,:-

முல்லைத்தீவு முறிப்புப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத மரம் வெட்டுதல், மரங்கடத்தல், காடழிப்பு முறைப்பாடுகளை அரசும், வனவளத் திணைக்களமும் தடுக்கத் தவறி வந்திருக்கின்றன.

மக்களின் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. இத்தகைய கொள்ளை முயற்சிகள் நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன என்று செய்திகள் வருகின்றன. இதனால்அப்பிரதேசங்களுக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களான கணபதிப்பிள்ளை குமணன், சண்முகம் தவசீலன் ஆகியோர் சட்டவிரோதிகளால் - கொள்ளையர்களால் தாக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகிய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் மட்டுமல்ல ஏனைய ஊடகவியலாளரதும், ஊடகத்துறையினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் உடன் கைது செய்யப்பட்டுத் தண்டனை வழங்க வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றோம்.

அத்தோடு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நிவாரணமும், இழப்பீடும், நியாயமும் வழங்கப்பட வேண்டும் எனவும் அரசை வற்புறுத்துகிறோம் - என்றுள்ளது.

## மாணவிக்கு கொரோனா

மருதானையில் உள்ள பெண்கள் பாடசாலையின் தரம் 08 இல் கல்வி பயிலும் மாணவிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் வேயங்கொட - எலுவப்பிட்டிய பகுதியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# எத்தனை பேரை வேண்டுமானாலும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தலாம்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



நாட்டு மக்களின் நன்மைக்காக எத்தனை பேரை வேண்டுமானாலும் இராணுவம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தத் தயார் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

தற்போதைய சூழலில் இரண்டாயிரம் பேரைத் தனிமைப்படுத்தக்கூடிய மையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் தற்போதைய நிலையில் 96 வயதிற்குட்பட்ட 10 ஆயிரத்து 500 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டு மக்களின் நன்மைக்காக எத்தனை பேரை வேண்டுமானாலும் இராணுவம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தத் தயார்.

மினுவங்கொட கொரோனா தொத்தணியில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட பெண் நோய்வாய்ப்படுவதற்கு முன்னர் அவருக்கு இருமல் போன்ற அறிகுறிகள் இருந்துள்ளன.

அவரை பின் தொடர்ந்தபோது சுமார் 33 பேர் கொண்ட குழு அதே நோய் அறிகுறிகளை கொண்டுள்ளமை உறுதியானது. இவ்வாறு தேடி வருகின்றோம். இப்படி இருக்கையில் இதுதான் ஆரம்பப்புள்ளி என எந்தவித நம்பிக்கையுமின்றி சொல்வதில் நியாயமில்லை.

புலனாய்வுப் பிரிவு உட்பட அனைத்து இராணுவமும் சுகாதார பாதுகாபபுக்காக செயற்பட்டு வந்தாலும் அதனால் எந்த வகையிலும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படவில்லை.

அனைத்து அதிகாரிகளும் சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வந்த போதிலும் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லை. – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்லாமிய அடிப்படை வாதம் தொடர்பில் எச்சரித்தபோது ரணிலே அதை எதிர்த்தார்

## ஆணைக்குழு முன் போட்டுடைத்தார் மைத்திரி

கொழும்பு, ஒக். 14

தற்போதைய தேசிய உளவுச் சேவையின் பிரதனியும் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளருமான பிரிகேடியர் சுரேஷ் சலே, 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் தேசிய பாதுகாப்புப் பேரவையில் விடயங்களை முன் வைத்தபோது, அதற்கு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முஸ்லிம்களிடையே அமைதியின்மை ஏற்படலாம் எனத் தெரிவித்து அதனை அவர் எதிர்த்தார் எனவும், அதன்பின்னர் பிரிகேடியர் சுரேஷ் சலேவை இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் பதவியில் இருந்து மாற்ற பிரதமர் ரணிலும் மற்றொரு அமைச்சரும் அழுத்தம் கொடுத்திருந்தனர் எனவும் அவர் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

எவ்வாறாயினும் சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஊடாக சுரேஷ் சலேவைக் கைது செய்ய திட்டமிடப்பட்ட நிலையில், தானும் அப்போதைய இராணுவத் தளபதியும் இணைந்து கலந்துரையாடி, அவரை மலேசியத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக இடமாற்றம் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று இரண்டாவது நாளாக சுமார் 6 மணி நேர சாட்சியம் வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஒருமுறை நிகாப்பை தடை செய்யப் பேச்சுக்கள் இடம்பெற்றபோது, அங்கு பேசப்பட்ட விடயங்களை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு தொடர்பில் எந்த அக்கறையும் கொண்டிருக்கவில்லை. அதனால்



அவரை தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்துக்கு அழைப்பதை நிறுத்தினோம்.

நிறைவேற்று ஜனாதிபதி எனும் ரீதியில் நான் வழங்கும் எந்த ஆலோசனைகளையும் பின்பற்றக்கூடாது என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களுக்கு அறிவித்திருந்தார். - என்றார்.

# பயணிகள் விவரங்களைப் பதியுமாறு ஓட்டோச் சாரதிகளுக்கு அறிவுறுத்து

## முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள முக்கிய அறிவிப்பு



கொழும்பு, ஒக். 14

ஓட்டோக்களில் பயணிப்பவர்கள் தொடர்பில் பதிவு ஒன்று மேற்கொள்ளுமாறு, ஓட்டோச் சாரதிகளிடம் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வாகனத்தில் பயணிக்கும் நபர்கள் தொடர்பில் பதிவொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார், ஓட்டோ மற்றும் போக்குவரத்து சேவை வழங்கும் வாடகை ஓட்டோச் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிலர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முறையை இதுவரையில் கண்டுபிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பயணிக்கும் ஒவ்வொரு பயணிகள் தொடர்பிலும் பதிவொன்றை பதிவு செய்துக் கொள்ளுமாறு பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தங்கள் வாகனத்தில் பயணித்தவர் யார் என்பதனை அறிந்துகொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் எந்த இடத்தில் ஏறினார்கள், எந்த இடத்தில் இறங்கினார்கள் என்பதனை கையடக்க தொலைபேசியில் அல்லது புத்தகம் ஒன்றில் குறித்து வைத்துக்கொள்ளுமாறு பொலிஸார் அறிவுரை வழங்கியுள்ளனர்.

# வர்த்தகநிலையம், மருந்தகங்கள் அனைத்தும் கம்பஹாவில் பூட்டு!

கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் அனைத்தும் நேற்று (செவ்வாய்க் கிழமை) முதல் மூன்று நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன.

தற்போது கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் நலன் கருதி கடந்த சில நாள்களாக வர்த்தக நிலையங்களும் மருந்தகங்களும் திறந்து வைக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தன.



இந் நிலையில் தற்போதைய கொரோனா வைரஸ் நிலைமை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை பரிசீலித்த பின்னர், இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

எனினும் உயர்தர பரீட்சை எழுதும் பரீட்சார்த்திகளுக்கு இந்த கட்டுப்பாடுகள் எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சீதுவை பாடசாலையின் ஆசிரியர் ஒருவருக்கு கொரோனா தொற்று!

*கொழும்பு, ஒக். 14*

*சீதுவை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கட்டுநாயக்க இரத்தொலுகம மற்றும் ஆடியம்பலம ஆகிய பிரதேசங்களில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார பரிசோதகர் சுரேஷ் குமார் தெரிவித்தார் .*

*அவர்களில் அநேகமானோர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தை சேர்ந்த ஊழியர்களும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும் ஆவார்கள்.*

*தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை 39 ஆகும்.*

*சீதுவை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த திங்கட்கிழமை புதிதாக இனங்காணப்பட்ட தொற்றாளர்களுக்கு இடையில் ஆடியம்பலம பிரதேசத்தின் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*இதன் காரணமாக அந்தப் பாடசாலையின் மாணவர்கள் உள்ளிட்ட நெருங்கிப் பழகியவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.*

# தனிமைப்படுத்தலை முடித்து 547 பேர் வெளியேறினார்கள்!

கொழும்பு, ஒக். 14

**தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து நேற்றைய தினம் (செவ்வாய்கிழமை) 547 பேர் வெளியேறியுள்ளனர்.**

**கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இதற்கமைய 51 ஆயிரத்து 480 பேர் இதுவரை தமது தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.**

**அத்துடன், 10 ஆயிரத்து 281 பேர் தொடர்ந்தும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.**

# கொழும்பு தொடர்மாடி குடியிருப்பாளர் அனைவருக்கும் பி.சி.ஆர். சோதனை!

கொழும்பு - கொம்பனித்தெருவில் அமைந்துள்ள ஆடம்பர தொடர்மாடியின் குடியிருப்பாளர்கள் அனைவரையும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

தொடர்மாடியில் வசிக்கும் ஒருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளதைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரின் குடும்பத்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேநேரம் கொரோனானவால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளை சோதனைக்கு உட்படுத்தியதாகவும் அவர்கள் பாதிக்கப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தொடர்மாடியில் குடியிருப்பவர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ள அதிகாரிகள், எதிர் வரும் நாள்களில் தொடர்மாடியில் குடியிருப்பவர்கள் அனைவரையும் சோதனைக்கு உட்படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

தொடர்மாடியை முற்றாக முடக்கவில்லை என்றும் எனினும் அங்குள்ளவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகின்றனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிப்பவர்களில் எவராவது இருமல், காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்களானால் அவர்கள் உடனடியாகத் தங்களைத் தொடர்புகொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும் இந்தத் தொடர்மாடியில் இராஜதந்திர சமூகத்தைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் அதிகளவு வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது

காலைக்கதிர் Kalaikkathir

## அரசமைப்பின் '20' சட்ட வரைவை

# திருத்தியமைப்போம்! நிறைவேற்றுவோம்!!

## ராஜபக்ஷ அணி விடாப்பிடி



கொழும்பு, ஒக்.13

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன் றம் வழங்கியுள்ள தீர்ப்புக்குத் தலைசாய்க் கின்றோம். அதைத் திருத்தியமைத்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்று வோம். இந்த முடிவிலிருந்து நாம் அணு வளவும் பின்வாங்கக்கூடாது.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இதையடுத்து ஆளுங்கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ராஜபக்ச சகோதரர்கள் நடத்திய முக்கிய கலந்துரையாடலின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

20ஆவது திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு குறித்து நாட்டு மக்கள் குழப்பபடையத் தேவையில்லை. 20ஆவது திருத்தம் தொடர்பான நாடாளுமன்றக் குழு நிலை விவாதத்தில் அதில் சில திருத்தங்களை மேற்கொள்ள அரசு ஏற்கனவே திட்டமிட்டிருந்தது. இந்தநிலையில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் வெளிவந்துள்ளது.

எனவே, அரசு சுலபமான முறையில் '20' இல் திருத்தங்களை மேற்கொள்ளும்.

20 ஐத் திருத்தியமைத்து அதை நிறை வேற்றுவதில் ஜனாதிபதியும், பிரதமரும், சமல் ராஜாபக்ஷ உள்ளிட்ட சிரேஷ்ட அமைச்சர்களும் உறுதியாக உள்ளனர் - என்றார்.

## அரசுக்குப் பேரவமானம்! நீதித்துறை சாட்டையடி!!

### திருத்தம் வந்தாலும் '20'ஐ எதிர்ப்போம்; எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



கொழும்பு, ஒக்.13

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, அரசுக்குப் பேரவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

20ஆவது திருத்தச் சட்ட வரைவில் திருத்தம் எதனையும் மேற்கொள்ளாமல் அதை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மட்டும் நிறைவேற்றலாம் என்று அரசு எண்ணியது. அந்த எண்ணம் இன்று தவிடு பொடியாகியுள்ளது.

குறித்த சட்ட வரைவில் உள்ள சரத்துக்கள் அனைத்தையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்ற முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தேர்தல்கள் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்கள், ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிப்பு வழங்கல், நாடாளுமன்றக் கலைப்புக்கான ஜனாதிபதியின் அதிகாரம், தேர்தல் ஆணையத்தின் அதிகாரம் ஆகிய நான்கு சரத்துக்களை நாடாளுமன்ற அனுமதியுடன் மட்டும் நிறைவேற்ற முடி யாது என்று உயர்நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

குறித்த நான்கு சரத்துக்களையும் நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. இது அரசுக்கு நீதித்துறை வழங்கியுள்ள சாட்டையடியாகும்.

எனினும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கமைய 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் அரசு மாற்றங்களைச் செய்தாலும் அந்தச் சட்ட வரைவை நாம் எதிர்த்தே தீருவோம்.

ஏனெனில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு தற்போது அவசியமற்றது. அதிலுள்ள மேலும் பல சரத்துக்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆபத்தானவை. எனவே, 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் – என்றார்.

## யாழில் மூன்று வாள்களுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஒக்.13

வாள்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர், யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி, பால்பண்ணை – அம்மன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இன்று நண்பகல் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

அந்த வீட்டில் 3 புதிய வாள்களை மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று புலனாய்வு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் இன்று நண்பகல் குறித்த வீட்டுக்குச் சென்ற விசேட அதிரடிப் படையினர் தேடுதல் மேற்கொண்டனர்.

அங்கு 3 வாள்களையும் மீட்டதுடன் அதனை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 21 வயதுடைய இளைஞர் ஒருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## கம்பஹாவைச் சேர்ந்த தாதிக்குத் கொரோனா; மட்டு. வைத்தியசாலையின் ஒரு பகுதி முடக்கம்

*மட்டக்களப்பு, ஒக்.13*

*போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த தாதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதனால் குறித்த வைத்தியசாலையின் ஒரு பிரிவு தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது.*

*இந்தத் தகவலை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.லதாகரன் தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, நேற்று மெடிஹெல்ப் தனியார் மருத்துவமனையின் மொரட்டுவக் கிளையின் நடவடிக்கைகளும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அங்கு சென்றதாலேயே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது.*

# இலங்கையில் சீனாவின் ஆதிக்கமா? ராஜபக்ஷ அரசின் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஒக்.13

இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள விமர்சனங்களுக்கு ராஜபக்ஷ அரசு பதிலளித்துள்ளது.

இலங்கைக்குச் சாதகமான வர்த்தக, அபிவிருத்தி கொள்கையுடன் இணங் கும் நாடுகளுடன் சேர்ந்து செயற்படுவதற்கே நாம் எதிர்பார்க்கின் றோம். அதற்கமையவே சீனாவுக்கு முன்னுரிமை கொடுக்கின்றோம் என்று ராஜபக்ஷ அரசின் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவால் நிராகரிக்கப்பட்ட திட்டங்களை சீனா முன்வந்து செய்கின்றது. இதனால் சீனாவின் பொருளாதாரக் கொள்கையுடன் நாம் பயணிப்பதே எமக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அரச தகவல் திணைக் களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய் தியாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின்வெளிநாட்டுக்கொள்கை மிகவும் தெளிவானது. எந்தவொரு நாட்டுடனும் முரண்படும் கொள்கையில் செயற்பட நாம் தயாராக இல்லை. சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங் கையுடன் நெருக்கமான நட்புறவைக் கொண்டுள்ளபோதும் வர்த்தக, அபிவிருத்தித் திட்டங்களில் எமக்குச் சாதகமான நாடுகளுடன் நாம் இணைந்து பயணிக்கின் றோம். சீனாவுக்கு முன்னுரிமை கொடுப்பதாக சில விமர்சனங்கள் எழுந்தாலும் கூட அதில் உண்மையில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, தெற்கின் கடல் ஆதிக்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என இலங்கை தீர்மானித்தபோது, முதலில் இந்தியாவுடனேயே பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், இந்திய அரசு இதற்கு இணக்கம் தெரிவிக்காததால், அவர்களுக்கு அதன் அவசியம் இருக்கவில்லை என்பது புரிந்துகொள்ளப்பட்டது. அதன் பின்னரே அம்பாந்தோட்டை அபிவிருத்தி வேலைத்திட்டத்தைச் சீனா கையில் எடுத்தது.

அண்மையில் இலங்கை வந்த சீன



உயர்மட்டக் குழுவொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் விசேட கலந்துரையாடல்களை நடத்தியதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் மீதான அடக்குமுறை நாட்டின் ஜனநாயகத்தையே கொல்லும்!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் எச்சரிக்கை

ஊடகங்கள் மீதான அடக்குமுறை நாட்டின் ஜன நாயகத்தைக் கொல்லும் என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள் ளனர்.

வவுனியாவில் இடம்பெற்றுவரும் காணாமல் ஆக் கப்பட்டோரின் போராட்ட இடத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே உறவி னர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் குறிப்பிடுகையில் –

பத்திரிகைச் சுதந்திரம் என்பது அரசாங்கத்தின் தணிக்கை இல்லாமல் செய்திகளை வெளியிட அல்லது கருத்தை பரப்புவதற்கான உரிமையாகும்.

அமெரிக்காவின் அரசியல் சாசனத்தின் முதலாவது சரத்து பத்திரிகை சுதந்திரத்தின் பெரும் அரண்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.




பத்திரிகைச் சுதந்திரத்தை இழந்தால், அந்த இனம் அரசியல் உரிமைகளை இழக்கும். இது நீண்ட கால மாக நம் தாயகத்தில் நடந்து வருகிறது.

முல்லைதீவில் மரங்களை அழிக்கும் செயற்பாட்டை வெளிக்கொணரும் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் தாயகத்திலிருந்து மரங்களை அகற்றுவது தமிழர்களைப் பாதிக்கும். இது இனப்படுகொலையை நிறைவேற்றுவதற்கான மற்றொரு வழியாகும். தொல் பொருள் திணைக்களத்தினர் சிங்கள மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்ட போலிக் கதையின் பெயரில் எங்கள் நிலத்தை ஆக்கிரமிக்கிறார்கள்.

எனவே, பத்திரிகையாளர்கள், குறிப்பாக தமிழ்ப் பத்திரிகையாளர் மீதான தாக்குதலை நாங்கள் கண்டிக் கிறோம். இவ்வாறான அடக்குமுறைகள் தமிழர்கள் உண்மையான தீர்வைக்காண அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய, இந்திய சக்தி மிக்க நாடுகளின் தேவையை உணர்த்துகின்றது. – என்றனர்.

# இயக்கச்சி தனிமைப்படுத்தல் முகாமில் ஒன்பது பேருக்கு கொரோனாத் தொற்று!

கிளிநொச்சி, இயக்கச்சி தனி மைப்ப டுத்தல் முகாமில் தனிமைப் படுத்தப்பட் டுள்ள ஒன்பது பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தி யர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் பல இடங் களி லிருந்தும் 285 பேருக்கு நேற்று (செவ் வாய்க்கிழமை) கொரோனா பி.சி.ஆர். பரி சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.




இந்த பரிசோதனைகள், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற் கொள்ளப்பட்டன எனத் தெரிவித்துள்ள த.சத்திய மூர்த்தி, ஏனைய 276 பேருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மன்னார், பட்டித் தோட்டம் மற்றும் பெரிய கடை பகுதிகளைச் சேர்ந்த 81 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் எவருக் கும் வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட வில்லை என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம்!

## பல்வேறு அமைப்புகளும்விடுத்தன



முல்லைத்தீவு, முறிப்பு பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தல் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்கள் சண் முகம் தவசீலன் மற்றும் கணபதிப்பிள்ளை குமணன் உள் ளிட்ட இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில் முல்லைத்தீவு ஊடக வியலா ளர்கள் மீது தாக்குதல் நடத்தி யவர்கள் உடனடியாக சட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்ட வேண்டும் என மன் னார் மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

### மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம்

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் –

சட்ட விரோத செயற்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் தமது கடமையை மோற்கொண்ட இரு ஊடகவியலாளர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக ஊடகவியலா ளர்கள் மீது தாக்குதல் சம்பவங்களும் அச்சுறுத்தல் சம்பவங்களும் அதிகரித் துள்ளன. குறிப்பாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஊடகவியலாளர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச் சியாக இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. இந்தச் சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் மாகாண ரீதியில் உள்ள ஊடக வியலாளர்களை ஒன்றுதிரட்டி போராட்டங் களை மேற்கொள்ள வேண்டிவரும் என எச்சரிக்கை விடுக்கிறோம் – என தெரி விக்கப்பட்டுள்ளது.

### வவுனியா தமிழர் ஊடகவியலாளர் சங்கம்

முல்லைத்தீவு ஊடகவியலாளர்க ளின் தாக்குதலுக்கு வவுனியா தமிழர் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம் வெளி யிட்டுள்ளது.

குறித்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக் கையில்–

இலங்கையில் ஊடக சுதந்திரம் கேள் விக்குறி யாகி வருகின்றமை தொடர்பாகப் பல தரப்பினராலும் சுட்டிக்கப்பட்டப்பட்டு வரும் நிலையில் வடபகுதியில் தொடர்ந் தும் அதிகார வர்க்கத்தினரால் ஊடகவிய லாளர்கள் மீது வன்முறைகள் பிரயோகிக் கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இன, மத பேத மின்றி ஊடக வியலாளர்கள் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டமை மாத்திரமின்றி கொலையும் செய்யப்பட்ட வரலாறுகள் இலங்கையில் இடம்பெற்ற நிலையில் அவற்றுக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை.

இதன் தொடர்ச்சியாகவே முல்லைத் தீவில் மரக் கடத்தல் மாபியாக்கள் தொடர் பாக செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊட கவியலாளர்கள் மூர்க்கத்தனமா கத் தாக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத செயற்பாடுகளைத் தொடர்ந் தும் முன்னெடுக்கவும் அந்த விடயங்கள் தொடர்பாக தமக்கு ஆதரவாகவுள்ள அரச அதிகாரிகளை இனங் காட்டாது இருப்பதற் காகவுமே மிலேச்சத்தனமான செயற்பாடு களில் சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடு களில் ஈடுபடும் குழுக்கள் இவ்வாறான தாக்குதல் களில் ஈடுபட்டு வருகின்றன.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் பார பட்சமின்றி செயற்பட வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீ ரெலோ கட்சி

இந்த செயலை கடுமையாக கண்டிப்ப தாக ரெலோ கட்சியின் இளைஞரணித் தலைவர் பரமேஸ்வரன் கார்த்தீபன் ஊடக அறிக்கையொன் றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் –

இலங்கையில் புதிய அரசாங்கம் உருவாகி ஆறு மாதங்களுக்கு மேல் கடந் துள்ள நிலையில், ஊடகவியலாளர்கள் மீதான அழுத்தமும் தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

வடக்கு, கிழக்கிலுள்ள சிறுபான்மை யின ஊடகவியலாளர்கள் இன்றும் பாதுகாப்புத் தரப்பினரால் கண்காணிக் கப்படுவதுடன் அவர்களுக்காகப் பணி யாற்றவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதிகார வர்க்கத்தின் அநீதியைக் வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றமையுடன் இனந்தெரியாத நபர்களின் மூலமும் அச்சுறுத்தப்படு கின் றனர். எனவே, தொடரும் மறைமுகமான ஊடக அடக்கு முறையைத் தடுத்து நிறுத்தி ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மணி சார்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொள்கின்றேன் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அந்த உறுப்பினர்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை திக தியிடப்பட்டுள்ள அந்தக் கடிதம் யாழ்ப் பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் சிலர் உள்ளிட்ட சட்டத்தரணி விஸ்வலிங் கம் மணிவண்ணன் சார்பு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட் டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங் கிரஸ் கட்சிக்கு தங்களது பெயர் எமது இயக்கத்தால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் அந்தக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு குறிப்பிட்ட சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந் தீர்கள்.

எமது அமைப்பால் ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டவர்களு டன் தொடர்புபட்ட வகையில் எமது அர சியல் இயக்கத்துக்கும் அதன் தலைமைக் கும் எதிரான கருத்துக்களைப் பொது வெளிகளிலும் முகநூலினூடாகவும் தெரி வித்து வருகின்றீர்கள்.

எமது அரசியல் இயக்கத்துடன் தங் களை இணைத்துப் பயணிக்க நல்லிணக் கங்களைத் தாங்கள் தொடர்ச்சியாக மீறி வருகின்றீர்கள். எமது அரசியல் இயக் கத்தை மத்திய குழுவின் தீர்மானங்களே கட்டுப்படுத்துவதாகும். எமது அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிப்ப தாயின் மத்திய குழுத் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது என் பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன் – என்றும் பொதுச் செயலாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாநகர சபையில் இரு பெண் உறுப்பினர்கள் உட்பட மூவருக்கும், வலிகாமம் தெற்கு மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைகளின் 7 உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

### ஊடகவியலாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இணையத் தளத் தகவல்கள் தெரி வித்தன.

தாக்குதலுடன் தொடர்புடைய நால் வரில் முள்ளியவளை 03 ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த – நோர்வே நாட்டின் வதிவிட பிரஜா உரிமை பெற்ற – 27 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினமே கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களின் ஒளிப்பட கருவிகளை அடித்துப் பறித்து அதில் உள்ள 'மெமறிக்காட்டினை' எடுத்து மனை வியிடம் கொடுத்து வைத்துள்ளார் என்று கூறப்பட்டது.

ஊடகவியலாளர்களின் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட் டில் மனைவியும் கைது செய்யப்பட்டார்.

இருவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதி வான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்ட போது சந்தேகநபரை 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்ட நீதிவான் மனைவியை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஆள்பிணையில் விடுவித்தார்.

ஊடகவியலாளரைத் தாக்கிய பிரதான சந்தேகநபர் எனக் கூறப்படும் சட்டவிரோத மரக்கடத்தல் பேர்வழியும் நேற்று காலை முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப் பட்டு வருகிறார். அவரை இன்று காலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளார் கள். – என்று அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# ரிஷாத் கைது நடவடிக்கை முழு அரசியல் பழிவாங்கல்

## தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப் காட்டம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொழும்பு, ஒக்.14

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீனைக் கைது செய்ய எடுக்கும் நடவடிக்கை, வெறுமனே அரசியல் பழிவாங்கல் நோக்குடையது எனவும், 52 நாள் அரசாங்கத்துக்கு உதவாத காரணத்தினால் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கையின் தொடர்ச்சியே இது என்றும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, புத்தளத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மன்னார் வாக்காளர்களை, தமது சொந்த இடமான மன்னாரில் வாக்களிக்க பஸ் வசதிகளை செய்து கொடுத்த விவகாரம் தொடர்பிலேயே, அவரை தற்போது கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அரச உயர் மட்டத்தின் அனுமதியைப் பெற்றே முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், குறிப்பிட்ட வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கான பஸ் வசதிகளை மேற்கொண்டிருந்தார். எனினும், இடம்பெயர்ந்தோர் அமைப்பு பஸ்ஸுக்கான கட்டணத்தை உரிய அமைச்சுக்கு செலுத்தியுமிருந்தது.

இது தொடர்பில், குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது, உரிய ஆதாரங்களுடன் அவர் விடயங்களைத் தெளிவுபடுத்தினார். அது மாத்திரமின்றி, இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கான இவ்வாறான வசதிகள் கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்று வருவதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2015 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீனை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில், வில்பத்து விவகாரம் சோடிக்கப்பட்டு பூதாகரமாக்கப்பட்டது. அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரும் அவர் மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதும், எந்தப் பிழையும் காண முடியாத நிலையில், அவரது சகோதரர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, சுமார் ஐந்தரை மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். இப்போது அவரை மீண்டும் கைது செய்யுமாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நூறு பேர் கையெழுத்திட்டு, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். உலகில் எந்த நாட்டிலும் நடக்காத விடயமே இதுவென கூறலாம்.

இந்நிலையில், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீனை நீதிமன்றப் பிடியாணையைப் பெற்று, கைது செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸாரிற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். பின்னர் அவரை கைது செய்ய, பிடியாணை பிறப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் முன்வைத்த கோரிக்கையை, கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்திருந்த அதே வேளை, பிடியாணை இல்லாமல் அவரை கைது செய்ய முடியும் என பொலிஸாரிற்கு, சட்டமா அதிபர் மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.



இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, கட்சித் தொண்டர்களும், ஆதரவாளர்களும், நலன்விரும்பிகளும் பொறுமைகாத்து அவருக்காக பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.


## 680 ரவைகள் கல்வயலில் மீட்பு

யாழ்.சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலடியிலுள்ள காணியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

அரச புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலையில் இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது எவ்.என்.சி.வகை துப்பாக்கி ரவைகள் 680 மீட்கப்பட்டுள்ளன என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.





## இயந்திரப் படகு கடலில் மூழ்கியது

வவுனியா, ஒக்.14

வாழைச்சேனை ஹைராத் துறையிலிருந்து மீன் பிடிக்க மூவருடன் சென்ற 32 அடியுடைய – வாழைச்சேனை நபர் ஒருவருக்கு சொந்தமான – இயந்திரப் படகு ஒன்று விபத்துக்குள்ளாகிக் கடலில் மூழ்கியுள்ளது.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து சுமார் 55 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை துறைமுக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது வீசி வரும் காற்றின் வேகம் அதிகரித்தமையால் இந்த இயந்திரப் படகு மூழ்கியதாக மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இயந்திரப் படகில் சென்ற மூன்று மீனவர்களும் எவ்வித ஆபத்துக்களுமின்றி காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீரில் மூழ்கியுள்ள குறித்த இயந்திரப் படகை மீட்டெடுக்க கடற்படையினர் மற்றும் மீனவர்களின் ஒத்துழைப்புடன் உரிமையாளர் தீவிரமாக முயற்சி எடுத்து வருகின்றார்.


### மணமகள் தேவை

1977, யாழிந்து வேளாளர், பிரான்ஸ் Citizen, ஹஸ்தம், துணையை இழந்த மணமகன் (பதிவு இலக்கம்: 4723). விபரங்களுக்கு இணையவழி திருமணசேவை www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக்கழிவு. அழையுங்கள் 076 664 9401.

### மணமகன் தேவை

1990, யாழிந்து வேளாளர் அஷ்வினி, சாவகச்சேரி, பட்டதாரி ஆசிரியை மணமகள் (பதிவு இலக்கம்: 4783). விபரங்களுக்கு இணையவழி திருமணசேவை www.EQ-MarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). இடைத்தரகரின்றி மணமக்களின் ஜாதகம், படம், தொலைபேசிஎண் பெற்றுக்கொள்ளுங்கள். திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக் கழிவு. அழையுங்கள் 076 664 9401.


## பட்டதாரிகளுக்கான பயிற்சி காலவரையின்றி ஒத்திவைப்பு

அரச வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ஏற்ப ஆள் சேர்ப்பு செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி கடந்த (திங்கட்கிழமை) ஆரம்பிக்கப்படவிருந்தது.

இந்த நிலையில், நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


### கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1993.12.17 | பிறந்த திகதி – 1996.10.20 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – திருவோணம் | நட்சத்திரம் – திருவோணம் |
| பாவம் – 23 3/4 | பாவம் – 47 1/4 |
| கல்வி – பட்டதாரி | செவ்வாய் – 4 இல் |
| தொழில் – தனியார் வங்கி | கல்வி – A/L |
| எதிர்பார்ப்பு – வெளிநாடு, கனடா | தொழில் – ..... |
| | எதிர்பார்ப்பு – கனடா, UK விரும்பத்தக்கது. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1025/=Kg

- பிரான்ஸ்
- ஜெர்மனி
- டென்மார்க்
- நெதர்லாந்து
- இத்தாலி
- சுவிஸ்

1150/= Kg




எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2020 இல் வெளியிடப்பெற்றது.